# பா.ஜ.க.வின் மிரட்டலுக்குப் பயப்பட நாங்கள் அடிமையல்ல; கோழையும் அல்ல!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... 3–ஆம் பக்கத் தொடர்ச்சி

நான் முதல்வனில் திறன் பயிற்சிகள் கொடுக்கிறோம். இப்போது லேப்டாப்பும் கொடுக்கிறோம்.

**பெரிய லிஸ்ட் அளவிற்கு ஏராளமான திட்டங்கள்!**

மருத்துவத் துறையை எடுத்துக்கொண்டால், மக்களை தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் - நம்மை காக்கும் 48, நலம் காக்கும் ஸ்டாலின் போன்ற பல திட்டங்கள் இருக்கிறது. ஒவ்வொரு துறையாக எல்லாவற்றையும் பட்டியலிட்டுச் சொன்னால் அதற்கே ஒரு நாள் ஆகிவிடும். என்னிடம் அவ்வளவு பெரிய லிஸ்ட் இருக்கிறது. இதுதான், திராவிட மாடல்! உங்களுக்கு ஒரு புத்தகத்தைக் கொடுத்திருக்கிறோம். அதில் அனைத்துச் சாதனைகளும் இருக்கின்றன. இது எல்லாவற்றையும் தமிழ்நாட்டில் ஒவ்வொரு வீட்டிற்கும் - ஒவ்வொரு குடும்பத்திற்கும் சென்று சேர்த்து இந்த திட்டங்கள் எல்லாம் தொடர வேண்டும் என்றால், திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைய வேண்டும் என்று நீங்கள் எடுத்துச் சொல்ல வேண்டும்! அவர்களின் நம்பிக்கையைப் பெற வேண்டும்! அந்த நம்பிக்கையைத் தேர்தல் நாளில் வாக்குகளாக மாற்ற வேண்டும்! இதுதான் உங்கள் கடமை!

“வெல்லும் தமிழ்ப் பெண்கள் - “ஸ்டாலின் மகளிர் படை” என்ற பெயரில் ஏற்கெனவே நம்முடைய கழக மகளிர் வீடு வீடாகச் சென்று பிரசாரத்தில் கலக்கிக் கொண்டு இருக்கிறோர்கள். நான் தினமும் உங்களின் பரப்புரை வீடியோவை எல்லாம் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன். மக்களிடம் பெரிய வரவேற்பு இருக்கிறது. இந்த பிரசாரங்களுக்காக உங்களுக்கு தேவைப்படும் தகவல்கள் அடங்கிய ஒரு புத்தகத்தையும் உங்களுக்கு வழங்யிருக்கிறோம். அதில், நம்முடைய திராவிட மாடல் அரசின் 5 ஆண்டு சாதனைகள் இருக்கிறது.

ஒவ்வொரு குடும்பத்திலும் நம்முடைய திராவிட மாடல் அரசின் திட்டங்களால் ஒருவராவது நிச்சயம் பயன்பெற்றிருப்பார்கள். அதனால், நம்பிக்கையுடன் பிரச்சாரம் செய்யுங்கள்.

அடுத்த இரண்டு மாதத்திற்கு எந்தப் பக்கம் திரும்பினாலும் - எந்த வீட்டுக்குள் நுழைந்தாலும் - அங்கு, தி.மு.க.வும் - உதயசூரியனும்தான் இருக்க வேண்டும். தெருமுனைக் கூட்டங்கள் - திண்ணைப் பிரச்சாரங்கள் - சமூக வலைத்தளப் பிரச்சாரங்கள் என்று அனைத்திலும் நாம்தான் முத்திரை பதிக்க வேண்டும். எல்லாருக்கும் எல்லாம் என்பதை வெறும் வாய் வார்த்தைகளில் சொல்லாமல், ஒவ்வொரு தனிப்பட்ட நபருக்கும் என்ன தேவை என்பதையும் உன்னிப்பாகப் பார்த்துப் பார்த்துத் திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டு இருக்கிறோம்.

**ஜெயலலிதா மீது பிரதமர் மோடிக்கு திடீர் பாசம்!**

வளர்ச்சி என்றாலே பிடிக்காத ஒரு கட்சியாக பா.ஜ.க. இருக்கிறது. மக்கள் அவர்களைத் தொடர்ந்து புறக்கணிக்கிறார்கள். அதனால், அ.தி.மு.க.வைத் தன்னுடைய கிளைக் கழகமாக மாற்றி அதில் முன்னேறி வரலாமா என்று நினைக்கிறது பா.ஜ.க. பிரதமர் மோடி அவர்கள் திடீர் என்று அம்மையார் ஜெயலலிதா புகழ் பாட ஆரம்பித்திருக்கிறார். எந்த அம்மையார் ஜெயலலிதாவைப் புகழ்கிறார்? “குஜராத் மோடியா? இந்த லேடியா?” என்று சவால்விட்ட அம்மையார்மீது திடீர் பாசம் இன்றைக்கு மோடிக்கு வந்திருக்கிறது.

பிரதமர் மோடி அவர்களே... அம்மையார் ஜெயலலிதா விட்ட சவால் உங்களுக்கு மறந்துவிட்டதா? இல்லை, “இந்தியாவிலேயே அ.தி.மு.க. அரசாங்கம்தான் ஊழல் அதிகமாக நடக்கும் அரசாங்கம்” என்று உங்களின் நம்பர் 2 அமித் ஷா பேசினாரே அதை மறந்துவிட்டீர்களா? நீங்கள் மறந்திருக்கலாம்; ஆனால், இது எதையுமே தமிழ்நாட்டு மக்கள் மறக்கவில்லை.

**பிரதமர் மோடியின் நடிப்பை மக்கள் நம்ப மாட்டார்கள்!**

இதையெல்லாம், மறந்துவிட்டு அல்ல; மறைத்துவிட்டுப் பிரதமர் பேசுவது எதற்காக என்றால், ஒன்றிய பா.ஜ.க.வின் 12 ஆண்டுகால ஆட்சியில் தமிழ்நாட்டிற்கு என்று எதுவுமே செய்யவில்லை. சொல்லிக் கொள்ள சொந்தமாகச் சாதனைகள் இல்லாததால் - அம்மையார் ஜெயலலிதாவின் புகழ் பாடினால் வாக்குகள் வருமா என்று பார்க்கிறார்! தேர்தல் வந்துவிட்டதே என்றுகூட தமிழ்நாட்டிற்கு என்று எந்தச் சிறப்பு திட்டத்தையும் பட்ஜெட்டில் அறிவிக்க மனம் இல்லாத உங்களின் நடிப்பை தமிழ்நாட்டு மக்கள் நிச்சயமாக நம்ப மாட்டார்கள்.

பிரதமர் மோடி அவர்களே... தமிழ்நாடு உங்களிடம் கேட்பது என்ன தெரியுமா?

தென்னிந்தியாவின் மான்செஸ்டரான கோவை மெட்ரோவிற்கு ஏன் அனுமதி தரவில்லை?

கோயில் நகரமான மதுரை மெட்ரோவிற்கு அனுமதி கொடுத்துவிட்டீர்களா?

திருச்சி மெட்ரோவிற்கு அனுமதி வழங்க எது தடுக்கிறது?

கேபினட் மீட்டிங்கில் அகமதாபாத் மெட்ரோவிற்கு அனுமதி கொடுத்த நீங்கள், தமிழ்நாடு மெட்ரோ திட்டத்திற்கு ஏன் அனுமதி தர மறுக்கிறீர்கள்? இது உங்கள் கண்ணுக்கு தெரியவில்லையா?

எங்களின் கோரிக்கைகளையும் - தமிழ்நாட்டிற்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு செய்து கொண்டிருக்கும் துரோகங்களையும் - ஓரவஞ்சனைகளையும் நான் தொடர்ந்து சொல்லிக் கொண்டு இருக்கிறேன். அதற்கெல்லாம் உங்கள் பதில் என்ன?

ஓசூர் விமான நிலையத்திற்கு அனுமதி எங்கே?

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்கான முழுமையான நிதியை எப்போது தருவீர்கள்?

பள்ளிக் குழந்தைகளுக்கு சேர வேண்டிய 3 ஆயிரத்தி 500 கோடி ரூபாய் S.S.A. நிதியைத் தராமல் இழுத்தடிப்பதற்கு என்ன காரணம்?

ஜல்ஜீவன் இயக்கத்திற்கான மானியம் 3 ஆயிரத்தி 548 கோடி ரூபாயை எப்போது தருவீர்கள்?

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தர வேண்டிய 2 ஆயிரத்தி 246 கோடி ரூபாயை எப்போது தருவீர்கள்?

**செயற்கையான நிதி நெருக்கடி!**

ஒன்றிய அரசு திட்டங்களுக்கு தர வேண்டிய நிதியைக் கூட ஏன் தராமல் நிறுத்தி வைத்திருக்கிறீர்கள்?

ஜி.எஸ்.டி.யால் தமிழ்நாட்டிற்கு இந்த ஆண்டு 9 ஆயிரத்தி 600 கோடி ரூபாய் இழப்பு ஏற்படப் போகிறதே, இது அநியாயம் இல்லையா?

ரிசர்வ் பேங்கில் தமிழ்நாடு அக்கவுண்டில் இருந்த ஆயிரத்தி 709 கோடி ரூபாயை ஒன்றிய அரசு பிடித்தம் செய்தது சரியா?

## தமிழர் விரோதிகளும் தமிழினத் துரோகிகளும் வைத்துள்ள கூட்டணிக்கு தோல்வியை பரிசாகத் தருவீர்!

தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்திற்கு 16 ஆயிரத்தி 290 கோடி ரூபாய் இழப்பீட்டு நிதி வழங்க வேண்டும் என்று நிபந்தனை விதித்து, கூடுதல் சுமையை ஏற்றியது சரியா?

இதையெல்லாம் செயற்கையான நிதி நெருக்கடி என்று சொல்லாமல், வேறு என்ன என்று சொல்வது?

தமிழ்நாட்டின்மீது வன்மத்தோடு இப்படிப்பட்ட அநியாயங்களை செய்யும் பா.ஜ.க.வோடுதான் கூட்டணி வைத்துக் கொண்டு மாபெரும் துரோகியாக இன்றைக்கு உருவெடுத்திருக்கிறார் எதிர்கட்சித் தலைவர் பழனிசாமி அவர்கள்.

தமிழர் விரோதிகளும் - தமிழினத் துரோகிகளும் வைத்துள்ள இந்தக் கூட்டணியை மக்கள் முன் அம்பலப்படுத்தி அவர்களுக்குத் தோல்வியைப் நாம் பரிசாகத் தந்தாக வேண்டும். இதுதான் நம் முன் இருக்கும் முதல் கடமை.

**நம் கூட்டணி – கொள்கை உறுதியுடன் தொடர்கிறது!**

பொதுவாக, தேர்தல் கூட்டணிகளின் ஆயுட்காலம் மிகவும் குறைவு. ஆனால், தி.மு.க. தலைமையிலான நம்முடைய கூட்டணி அதை உடைத்திருக்கிறோம்! பாசிச பா.ஜ.க.வை வீழ்த்த வேண்டும் என்ற ஜனநாயக நோக்கத்துடன், 2019 தேர்தலுக்கு முன்பு தொடங்கப்பட்ட நம்முடைய கூட்டணி, தொடர்ந்து நடந்த 2021 சட்டமன்றத் தேர்தல், இடையில் நடந்த நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல், 2024 நாடாளுமன்றத் தேர்தல், இப்போது 2026 சட்டமன்றத் தேர்தல் வரையிலும் கொள்கை உறுதியுடன் தொடர்கிறது!

எனக்குத் தெரிந்து தமிழ்நாட்டின் தேர்தல் வரலாற்றிலேயே, இவ்வளவு நீண்ட காலம் ஒற்றுமையுடன் ஒரு கூட்டணி தொடர்வது இதுதான் முதன்முறை! வளர்ச்சியிலும் சாதனைத் திட்டங்களிலும் மட்டுமல்ல, கூட்டணியிலும் நாம் வரலாறு படைத்திருக்கிறோம்! “வெல்வோம் ஒன்றாக” என்று ஒவ்வொரு கூட்டத்திலும் ஏன் சொல்கிறேன் என்றால், ‘கொள்கையில்’ வெல்வோம் ஒன்றாக என்ற பொருளையும் சேர்த்துதான் அப்படி சொல்கிறேன்.

அண்மையில், எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி அவர்கள் என்ன பேசினார் என்று பார்த்தீர்களா? தேர்தலுக்காகத்தான் அவர்கள் கூட்டணியை அமைத்திருக்கிறார்களாம். சர்க்கஸ் முடிந்ததும் எவ்வாறு கூடாரத்தைப் பிரித்துவிடுவார்களோ, அதேபோன்று தேர்தல் முடிந்ததும் இவர்கள் மறுபடியும் ஆளுக்கொரு பக்கமாகப் பிரிந்து தங்களுடைய நாடகத்தைத் தொடர்வார்கள். இப்படிப்பட்ட N.D.A. சர்க்கஸின் ரிங் மாஸ்டர்தான் - பா.ஜ.க. அவர்கள் சொன்னபடி தமிழ்நாட்டு மக்கள் முன் வித்தை காட்டுபவர்தான் பழனிசாமி!

பழனிசாமி அவர்கள், தான் என்ன பேசுகிறோம் என்று தெரிந்துதான் பேசுகிறாரா என்று எனக்கு புரியவில்லை. அவர் ‘லேபர்’-ஆகச் சேர்ந்திருக்கும் ஓனரின் தலைமையிலான கூட்டணி, கொள்கை இல்லாத கூட்டணி - சந்தர்ப்பவாத கூட்டணி! அதை அவரே மக்களிடம் ஒப்புதல் வாக்குமூலமாகக் கொடுத்திருக்கிறார்.

**என்.டி.ஏ. கூட்டணி சுயநலத்துடன் இணைந்த கூட்டணி!**

பத்து தோல்வி பழனிசாமி அவர்களே! நீங்கள் மைண்ட் வாய்ஸ் என்று நினைத்துச் சத்தமாகப் பேசிவிட்டீர்கள். N.D.A. கூட்டணி தேர்தலுக்காக அமைக்கப்பட்ட கூட்டணி மட்டுமல்ல, வழக்குகளில் இருந்து தன்னையும் சொந்தக்காரர்களையும் காப்பாற்றிக் கொள்ள பழனிசாமி சுயநலத்துடன் இணைந்திருக்கும் கூட்டணி. எப்போது எல்லாம் தனக்குப் பிரச்சினை வருகிறதோ, அப்போது எல்லாம் டெல்லிக்கு காரில் மாறி மாறிச் சென்று சரணாகதி அடைவது அவருக்கு பழக்கமானதுதான்.

ஆனால், நாம் அப்படியா? ஒரு கொள்கையில் உறுதியாக நின்று போராடுகிறோம்! இப்போது கூட பாருங்கள்! டெல்லி முதலமைச்சராக இருந்த அரவிந்த் கேஜ்ரிவால் மீது பொய் வழக்கு போட்டு சிறையில் அடைத்தார்கள்! நேர்மையாக நேர் வழியில் தேர்தலை எதிர்கொள்ள துணிச்சல் இல்லாமல் கோழைத் தனமாக நடந்து கொண்டார்கள். இன்றைக்கு “அந்த வழக்கில் எந்த முகாந்திரமும் இல்லை” என்று சொல்லி நீதிமன்றமே சொல்லிவிட்டது.

மரியாதைக்குரிய அரவிந்த் கேஜ்ரிவால் அவர்களும், அவர் கட்சியைச் சேர்ந்த மனீஷ் சிசோதியா அவர்களும் சிறையில் கழித்த நாட்களை பா.ஜ.க.வால் திரும்பத் தர முடியுமா? மீண்டும் டெல்லியில் தேர்தல் நடத்த முடியுமா? இதே ஃபார்முலாவைத் தமிழ்நாட்டிலும் செய்ய நினைக்கிறார்கள். தங்களின் ஏவல் அமைப்புகளை வைத்து நம்மை மிரட்டப் பார்க்கிறார்கள். உங்களின் அரட்டல் மிரட்டலுக்கு பயப்பட நாங்கள் அடிமையும் இல்லை, கோழையும் இல்லை! தைரியமாக உங்களை எதிர்கொள்வோம்!

அதனால்தான், மக்கள் மட்டுமல்லாமல் பல கட்சிகளும் நம் மீது நம்பிக்கை வைத்து நம்முடைய கூட்டணியில் இணைகிறார்கள். தேர்தலுக்குத் தேர்தல் கூட்டணியில் இருக்கும் கட்சிகளின் எண்ணிக்கை குறைவதைத்தான் பார்த்திருக்கிறோம்! அந்த வழக்கத்திற்கு மாறாக நம்முடைய கூட்டணியின் பலம் மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டே போகிறது. தி.மு.க. மட்டும் வெற்றி பெற்றால் போதும் என்று நினைக்கவில்லை. யாரெல்லாம் பா.ஜ.க.வின் தமிழ் விரோத அரசியலை எதிர்க்கிறார்களோ அவர்கள் அனைவரையும் ஒன்றிணைக்க வேண்டும். நாம் அனைவரும் ஒன்றிணைந்து வெற்றி பெற வேண்டும் என்று நினைக்கிறேன்.

திராவிடம், காந்தியம், மார்க்சியம், அம்பேத்கரியம், சிறுபான்மையினர் நலன், பிற்படுத்தப்பட்ட மக்களின் நலன் என்று அனைத்து குரல்களையும் கொண்ட மதச்சார்பற்ற ஜனநாயக சக்தியாக - இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாக நம்முடைய கூட்டணி இருக்கிறது. கூட்டணிக் கட்சிகள் மக்களுக்காக வைக்கும் கோரிக்கைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றி கொடுக்கும் அரசாக நாம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். அதனால்தான் நம்மை நாடி இத்தனை பேர் வருகிறார்கள். ஒரு ஆரோக்கியமான ஜனநாயகம் என்பது அனைத்து தரப்பு குரல்களுக்கும் இடம் கொடுக்க கூடியதாக இருக்க வேண்டும். அப்படித்தான் நம்முடைய மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி இருக்கிறது.

**நாம் போராடியது தமிழ்நாட்டின் வெற்றிக்காக!**

இங்கு இருக்கும் அனைவருக்கும் தெளிவாகச் சொல்றேன்... புரிந்து கொள்ளுங்கள். நாம் போராடுவது, நம்முடைய கழக வெற்றிக்கும்; கூட்டணி வெற்றிக்கும் மட்டும் அல்ல, தமிழ்நாட்டின் வெற்றிக்காக.

பா.ஜ.க.வின் டப்பா இஞ்சின் முன்பு, தமிழ்நாட்டின் சூப்பர் பாஸ்ட் இஞ்சின் ஒருபோதும் தலைகுனியாது. அதனால்தான், இந்தத் தேர்தலில் வெற்றி பெற வேண்டியது, “தமிழ்நாடு அணியா டெல்லி அணியா” என்று சொல்லி பரப்புரை செய்கிறேன். இதில் வெற்றி பெறப் போவது நம்முடைய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தமிழ்நாடு அணிதான்! களத்தில் உழைப்போம்! மீண்டும் வெல்வோம்! மீண்டும் மீண்டும் வெல்வோம்! வெல்வோம் ஒன்றாக!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### திருச்சி மத்திய, வடக்கு மாவட்டத்தில்

# முதல்வர் பிறந்தநாளை நலத்திட்ட உதவிகளுடன் கொண்டாடுவோம்!

### மாவட்டச் செயலாளர்கள் க.வைரமணி – ந.தியாகராஜன் கூட்டாக அறிக்கை!

*திருச்சி, மார்ச் 1 -*

முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை கொண்டாடும் விதமாக நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடுவோம் என திருச்சி மத்திய, வடக்கு மாவட்டச் செயலாளர்கள் க.வைரமணி - ந.தியாகராஜன் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

அது வருமாறு:-





தி.மு.கழகத் தலைவரும், திராவிட மாடல் ஆட்சி நடத்தி இந்தியாவிற்கே வழிகாட்டியாக திகழும் திராவிட நாயகனும், தமிழக முதல்வருமான தளபதி அவர்கள் தன்னுடைய 73வது பிறந்த நாளான இன்று (மார்ச் 1ந் தேதி - ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணியளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் கலைஞர் அரங்கில் தி.மு.கழகத்தினர் அனைவரின் அது சமயம் திருச்சி மத்திய வடக்கு நேரிடையாக வாழ்த்துக்களை ஏற்றுக் கொள்கின்றார்.

அதுசமயம் திருச்சி மத்திய, வடக்கு மாவட்ட தி.மு.க.வினர் அவருக்கு நேரிடையாக வாழ்த்துக்களை தெரிவித்து கொள்வதோடு தலைவர் அவர்களின் 73வது பிறந்த நாளை முன்னிட்டு நமது மாவட்டம் முழுவதும் மாவட்ட, மாநகர அனைத்து ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளைக் கழகத்தின் சார்பில் கழக கொடி கம்பங்களை புதுப்பித்து இருவண்ண கொடி யேற்றியும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கியும், மார்ச் மாதம் முழுவதும் சிறப்பான நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து எழுச்சியுடன் தலைவர் அவர்களின் பிறந்த நாள் விழாவினை கொண்டாட வேண்டுமென கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு அவர்கள் தங்களது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

---


## முரசொலி உரிமை விளக்கம் படிவம் - 4 விதி - 8

| | | |
|---|---|---|
| **பிரசுரிக்கும் இடம்** | - | **முரசொலி அச்சகம், 180, கோடம்பாக்கம், நெடுஞ்சாலை சென்னை - 600 034.** |
| **பிரசுர முறை** | - | **நாளிதழ்** |
| **வெளியிடுபவர் & அச்சிடுபவர்** | - | **கார்த்திகேயன் சண்முகசுந்தரம்** |
| **ஆசிரியர் பெயர்** | - | **கார்த்திகேயன் சண்முகசுந்தரம்** |
| **இனம்** | - | **இந்தியன்** |
| **முகவரி** | - | **180, கோடம்பாக்கம், நெடுஞ்சாலை சென்னை - 600 034.** |
| **உரிமையாளர் பெயர் மற்றும் முகவரி** | - | **முரசொலி அறக்கட்டளை 180, கோடம்பாக்கம், நெடுஞ்சாலை சென்னை - 600 034.** |

**மேற்கண்ட விபரங்கள் அனைத்தும் நான் அறிந்த வகையில் உண்மையானவை என்று நம்பிக்கையுடன் கூறுகிறேன்.**

**கார்த்திகேயன் சண்முகசுந்தரம்**

**சென்னை** **(ஒப்பம்)**

**01.03.2026** **வெளியிடுபவர்**


---

# மாதவரம் 30 ‘அ’ வட்டத்தில் அறுசுவை உணவு வழங்கல்!

*சென்னை, மார்ச் 1 -*

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு பகுதி 30 அ வட்டக் கழகத்தின் சார்பில் கழகத் தலைவர் தமிழக முதல்வர் அவர்களின் 73 வது பிறந்த நாளை முன்னிட்டு விநாயகபுரம் திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி கழக கொடியினை ஏற்றி இனிப்பு வழங்கும் நிகழ்ச்சி இன்று (01.03.2026) காலை 8 மணி அளவில் நடைபெற உள்ளது.

விழாவிற்கு வட்டக் கழகத்தின் தலைவர் இ.ராமன் தலைமையில் நடைபெறுகிறது.

அவ்வமயம் பகல் ஒரு மணி அளவில் விநாயக புரம் மனநலம் ஒன்றிய மாற்றுத்திறனாளிகளுக்கு மதிய உணவு கேக் வெட்டி கொண்டாட இருப்பதால் நமது வட்டக் கழகத்தின் சார்பில் மண்டல குழு தலைவர் எஸ் நந்தகோபால் பகுதி செயலாளர் ஜி.துக்காராம், மருத்துவர் அணி தலைவர் ஜி. பார்த்தசாரதி, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் கே.லட்சுமி காந்தன், எஸ்.பி.கண்ணன், பி.வி. ராஜு, சி.பரமேஸ்வரி, அபிப் ரஹ்மான், எஸ்.என்.ராஜு, கே.நரேந்திரன், ஏ.வி.முருகன், எம்.சீனிவாசன், விக்னேஷ், வெற்றிவேல், பிரசன்னகுமார், காஞ்சி சண்முகம், சக்கரபாணி, எல்.சண்முகம் மற்றும் பலர் பங்கேற்கின்றனர்.

---

### கரூர் மாநகராட்சியில்

# ரூ.13.08 கோடி மதிப்பீட்டில் 25 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகள்!

### வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

*கரூர், மார்ச் 1 -*

கரூர் மாநகராட்சியில் 25 புதிய வளர்ச்சி திட்ட பணிகளை தொடங்கி வைத்து, 7 முடிவுற்ற பணிகளை மக்கள் பயன்பாட்டிற்கு சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி திறந்து வைத்தார்.

கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.13.08 கோடி மதிப்பீட்டில் 25 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைத்தும் .7 முடிவுற்ற பணிகளை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கும் நிகழ்வு நடைபெற்றது. கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி புதிய பணிகளை தொடங்கி வைத்து, முடிவுற்ற பணிகளை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். கரூர் மாவட்ட கலெக்டர் கு.ரவிகுமார் தலைமை வகித்தார்.

அண்ணா சாலை, கோதூர், திருக்காம்புலியூர், கலைஞர் நகர், திருவள்ளுவர் மைதானம், ராயனூர் பகவதி அம்மன் கோவில், ஜீவாநகர், வார்டு 17பசுபதிபாளையம், பகுதிகளில் திறந்த வெளிபூங்காவுடன் உடற்பயிற்சி கூடங்கள், பயணியர் நிழற்கூடம், அங்கன்வாடி பராமரிப்பு, நீரேற்று நிலையத்தில் மின் உபகரணங்கள் பயன்பாடு, பள்ளி கட்டிடங்கள் மேம்பாடு, சிறு நடைபாலம், திறன் மேம்பாட்டு மையம், அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை மேற்கு புறத்தில் ரூ. 2.77 கோடி மதிப்பீட்டில் இருப்பு அறையுடன் கூடிய முதியோர் இல்லம் கட்டும் பணி, கட்டளை மற்றும் சணப்பிரட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் ரூ. 85:20 இலட்சம் மதிப்பீட்டில் 35 எச்பி மின் மோட்டார், மின் உபகரணங்கள் பொருத்தும் பணி, மூலக்காட்டனூர் நீருந்து நிலையத்தில் 25 எச்.பி மின் மோட்டார், குடிநீர் விநியோக அளவுமானி பொருத்துதல், கட்டளை பழைய தாந்தோணி குடிநீர் தலைமை நீரேற்று நிலையத்தில் ரூ. 56.70 லட்சம் மதிப்பீட்டில் பேவர் போர்டு அறை, உபகரணங்கள் பொருத்தும் பணிகள் என மொத்தம் ரூ.13.98 கோடி மதிப்பீட்டிலான 25 புதிய வளர்ச்சித் திட்ட பணிகளை செந்தில்பாலாஜி தொடங்கி வைத்தார். 7 முடிவுற்ற பணிகளை மக்கள் பயன் பாட்டிற்கு தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் கிருஷ்ணராயபுரம் எம்.எல்.ஏ. க.சிவகாமசுந்தரி, கரூர் மாநகராட்சி மேயர் வெ. கவிதா, மாநகராட்சி ஆணையர் கே.எம்.சுதா, துணை மேயர் ப.சரவணன், மண்டலக் குழு தலைவர்கள்.எஸ்.பி.கனகராஜ், அன்பரசு ஆர்.எஸ்.ராஜா மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பலகுரலரசு ‘மிசா’ முருகுபாண்டியன்

**மார்ச் 1 (2016)**



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் பேச்சுக்களால் ஈர்க்கப்பட்டு ஆசிரியர் பணியில் இருந்து விலகி கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

1957இல் ‘உதயசூரியன் நாடக மன்ற’த்தை தஞ்சையில் தொடங்கி 1000க்கும் மேற்பட்ட நாடகங்களையும், 40,000க்கும் மேற்பட்ட கலை நிகழ்ச்சிகளையும் நடத்தியவர்.

கழக மாநாடுகளில் நடைபெற்ற கலைநிகழ்ச்சியின் போது பலகுரலில் பேசியதை கண்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் இவருக்கு “பலகுரலரசு” எனும் பட்டம் அளித்து பாராட்டினார்..

நெருக்கடி காலத்தில் மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறையில் இருந்தவர்.

“கழகத்திற்கு சோதனை வந்த காலங்களில் என்னைவிட்டு எங்கும் செல்லாமல், எல்லா சோதனைகளின் போதும், வேதனைகளின் போதும் என்னுடனே இருந்து ஓங்கி ஒலித்த குரல், இந்த பலகுரல் தம்பி முருகுபாண்டியன்” என்று தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**